கருமத்தம்பட்டி நகராட்சியில் 03.01.2025ம் நாள் நடைபெற்ற அவசரக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.

**பொருள் எண்.01**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட கருமத்தம்பட்டி பகுதியில் க.ச.எண்.170/1A2A பகுதியில் 4290 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள காலியிடத்தினை மனையிடங்களாக பிரித்து அதில் அடங்கியுள்ள சாலைகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது .மேற்படி இடத்திற்கு கோயமுத்தூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு துறை அலுவலகம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ந.க.எண். CELPA/VZKVBFY5/2024/TCP நாள்.26.09.2024ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் படி நகராட்சியில் உத்தேச குடியிருப்பு மனை பிரிவுகளாக ஒதுக்கிய 24 மனைக்கான அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்**.

**தீர்மானம் எண்.749**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.02**

பொது சுகாதார பிரிவு - கருமத்தம்பட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் **84/2023** - நாள்.**05.04.2023**) அனுமதி பெறப்பட்டு திருவாளர்கள். செந்தூர் எண்டர்பிரைசஸ் - திருப்பூர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கி தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனம் பொதுசுகாதாரம் பணிக்கான வெளிக்கொணர்வு முகமைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிக்கு தேவையான தூய்மைப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், தூய்மைப் பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் கனரக வாகனங்களை உரிய நிபந்தனைப்படி அமர்த்தப்படாமல் உள்ளதால், நகரின் பொதுஇடங்களில் குப்பைகள் முறையாக அப்புறப்படுத்தாமல் இருப்பதால் பொதுமக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்ச்சியாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. இதனால் பொதுமக்கள் மத்தியில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகிறது. இதுகுறித்து தொலைபேசி மூலமாகவோ நேரடியாகவோ மற்றும் எழுத்து மூலமாகவும் விளக்கம் அளிக்க தெரிவித்தும், அறிவிப்பு வழங்கப்பட்டும் நாளது தேதி வரை மேற்படி குறைகள் சரி செய்யப்படவில்லை. இச்செயல் நிபந்தனைகளை மீறிய செயலை வெளிப்படுத்துகிறது எனவே மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்**.

**தீர்மானம் எண்.750**

**01.01.2025முதல் 28.02.2025 வரை செந்தூர் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நீட்டிக்கலாம். மன்றம் அனுமதி அளிக்கிறது .( ஏனெனில் புது ஒப்பந்த புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரர் நியமிக்க ஆகும் காலம் வரை)**

**பொருள் எண்.03**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி, வாய்க்கால்பாளையம், உமாநாத் காலனி , கருமத்தம்பட்டி புதூர், இந்திரா நகர் மற்றும் ஆவரங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுகழிப்பிடங்கள் பழுது சரி செய்யும் பணியை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்கொள்ள 20.12.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தரணி இன்ப்ரா, கோவை | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |
| 2 | திருவாளர்கள். என்.எம்.எஸ் இன்ஜினியரிங்ஸ், கோவை | மதிப்பீட்டினை விட 2..00% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். தரணி இன்ப்ரா, கோவை (மதிப்பீட்டினை விட0.01% குறைவாக) என்ற நிறுவனம் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1133/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.751</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.04**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட மரியநல்லூர், சோமனூர் பேருந்து நிலையம் மற்றும் சேடபாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணியை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்கொள்ள 20.12.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்காணும் விபரத்திற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். தரணி இன்ப்ரா, கோவை | மதிப்பீட்டினை விட 0.01% குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திருவாளர்கள். என்.எம்.எஸ் இன்ஜினியரிங்ஸ், கோவை | மதிப்பீட்டினை விட 2..00% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். தரணி இன்ப்ரா, கோவை (மதிப்பீட்டினை விட0.01% குறைவாக) என்ற நிறுவனம் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1125/2024/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.752</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண்.05**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 உமாநாத் காலனியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பயன்பாடு இல்லாமல் சேதடைந்துள்ளது. இது பொதுமக்களுக்கு உபயோகம் இல்லாத நிலையில் உள்ளதால் இதனை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்படி கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இத்தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.753</u>**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**(ஒ/ம்)XXXX**

**திரு.க.மனோகரன்**

**நகர்மன்றத் தலைவர்**

**கருமத்தம்பட்டி நகராட்சி**

**ஆணையாளர்**

**கருமத்தம்பட்டி நகராட்சி**